I.சான்று தருக.

1. சொற்றொடர்

அ) நீர் ஆ) பருகினான் இ) நீர்ப் பருகினான் ஈ) வந்தான்

2. தொகைநிலைத் தொடர்

அ) கரும்புத் தின்றான் ஆ) கரும்பைத் தின்றான் இ) தின்றான் ஈ) கரும்பு

3. வேற்றுமைத்தொகை

அ) மதுரை சென்றார் ஆ) மதுரைக்குச் சென்றார் இ) கட்டுரையைப்படித்தான் ஈ) மதுரையில் இருக்கிறார்

4. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

அ) தேரை ஓட்டும் பாகன் ஆ) கொல்களிறு இ) சாரைப்பாம்பு ஈ) தேர்ப்பாகன்

5. நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

அ) தேர்ப்பாகன் ஆ) வீசுதென்றல் இ) பொங்கல் பானை ஈ) தமிழ்த்தொண்டு

6. வினைத்தொகை

அ) கொல்களிறு ஆ) கொன்ற களிறு இ) கொல்கின்ற களிறு ஈ) கொல்லும் களிறு

7. பண்புத்தொகை அ) செங்காந்தள் ஆ) சாரைப்பாம்பு இ) மலர்க்கை ஈ) தாய் சேய்

8. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

அ) வட்டத்தொட்டி ஆ) இன்மொழி இ) மார்கழித்திங்கள் ஈ) தாய் சேய்

9. உவமைத்தொகை

அ) அண்ணன் தம்பி ஆ) மலர்க்கை இ) மலர்போன்ற கை ஈ) செங்காந்தள்

10. உம்மைத்தொகை

அ) அண்ணனும் தம்பியும் ஆ) தாயும் சேயும்

இ) வெற்றிலை பாக்கு ஈ) தாய்சேய்

11. அன்மொழித் தொகை

அ) பொங்கு பானை ஆ) செங்காந்தள்

இ) முறுக்கு மீசை வந்தார் ஈ) அவன் வந்தான்

**II.கூறியவாறு செய்க.**

12. கரும்பு தின்றான் (தொகை நீக்குக)

அ) கரும்பு இனிக்கும் ஆ) கரும்பைத் தின்றான் இ) கரும்பு கசக்கும் ஈ) கரும்பு வேண்டும்

13. தேர்ப்பாகன் (தொகைநீக்குக )

அ) தேரின் பாகன் ஆ) தேரை ஓட்டும் பாகன் இ) தேரில் பாகன் ஈ) பாகனின் தேர்

14. வீசு தென்றல் (தொகை நீக்குக)

அ) வீசிய தென்றல் ஆ) தென்றல் இ) வீசு ஈ) தென்றல் காற்று

15. கொல்களிறு (எச்சமாக்குக)

அ) கொல் ஆ) களிறு இ) களிறு கொல்லும் ஈ) கொல்லும் களிறு

16. அலைந்தகடல் (தொகையாக்குக)

அ) அலைகின்ற கடல் ஆ) அலையும் கடல் இ)அலை கடல் ஈ) அலை

17. ஊறுகாய் (நிகழ்காலப் பெயரெச்சம் ஆக்குக)

அ) ஊறுகாய் ஆ) ஊறுகின்ற காய் இ) ஊறும் காய் ஈ) காய் ஊறும்

18. வட்டத்தொட்டி (தொகை நீக்குக)

அ) வட்டம் தொட்டி ஆ) வட்டம்இ) ஆன தொட்டி ஈ) வட்டமான தொட்டி

19. இன்மொழி ( மறைந்துள்ள பண்பு உருபை எடுத்து எழுது)

அ) இன் ஆ) மொழி இ) ஆன ஈ) இனிமையான மொழி

20. செங்காந்தள் (பிரித்து எழுதுக)

அ) செங்+காந்+தள் ஆ) செங்+காந்தள்

இ) செங்காந்+தள் ஈ) செம்மை+ காந்தள்

21. மார்கழித் திங்கள் (தொகை நீக்குக)

அ) மார்கழித் ஆ) திங்கள் இ) ஆகிய ஈ) மார்கழியாகிய திங்கள்

22. சாரைப்பாம்பு ( சிறப்புப் பெயரை எடுத்து எழுதுக)

அ) சாரை ஆ) பாம்பு இ) ஆகிய ஈ) சாரையாகிய பாம்பு

23. மல்லிகை (இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆக்குக)

அ) மல்லிகை ஆ) கை இ) மல்லிகை வாசம் ஈ) மல்லிகைப்பூ

24. பவளவாய் (தொகை நீக்குக)

அ) பவளம் ஆ) வாய் இ) வாய்ப்பவளம் ஈ) பவளம் போன்ற வாய்

25. மலர்போன்ற கை (தொகையாக்குக)

அ) மலர் ஆ) போன்ற இ) கை ஈ) மலர்க்கை

26. தாய்சேய் ( தொகைநீக்குக)

அ) தாய் ஆ) சேய் இ) தாயுடன் சேய் ஈ) தாயும் சேயும்

27. சிவப்புச் சட்டை அணிந்தவர் பேசினார் (தொகை ஆக்குக)

அ) சிவப்பு சட்டை அணிந்தவர் பேசினார் ஆ) சிவப்புச் சட்டையுடன் பேசினார்

இ) சட்டை அணிந்தவர் பேசினார் ஈ) அணிந்தவர் பேசினார்

28. பள்ளி சென்றான் (தொகாநிலைத்தொடர் ஆக்குக)

அ) பள்ளிக்கூடம் சென்றான் ஆ) பள்ளிக்குச் சென்றான்

இ) பள்ளியில் இருக்கிறான் ஈ) பள்ளியைக் கடந்தான்

29. கயல்விழி வந்தாள் (எவ்வகைத் தொகை)

அ) உவமைத் தொகை ஆ) உம்மைத் தொகை

இ) உருவகம் ஈ) அன்மொழித்தொகை

**III. இலக்கணக் குறிப்பு எழுதுக**

30. படம் பார்த்தான்

அ) வினைத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

31. மதுரை சென்றார்

அ) பண்புத்தொகை ஆ) நான்காம் வேற்றுமைத் தொகை

இ) அன்மொழித் தொகை ஈ) வினைத் தொகை

32. தமிழ்த்தொண்டு

அ) வேற்றுமைத்தொகை

ஆ) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

இ) அன்மொழித் தொகை ஈ) பண்புத் தொகை

33. வீசு தென்றல்

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) வேற்றுமைத்தொகை

34. இன்மொழி

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) வேற்றுமைத்தொகை

35. செந்தமிழ்

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

36. பனைமரம்

அ) பண்புத்தொகை

ஆ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

இ) வேற்றுமைத்தொகை

ஈ) வினைத்தொகை

37. மார்கழித் திங்கள்

அ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

ஆ) ஆறாம் வேற்றுமைத்தொகை

இ) உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

ஈ) வினைத்தொகை

38. மலர்க்கை, மதிமுகம், பவளவாய், முத்துப்பல்

அ) வேற்றுமை தொகைகள்

ஆ) உவமைத்தொகைகள்

இ) உம்மைத்தொகைகள் ஈ) உருவகங்கள்

39. கபிலபரணர், தாய்சேய், அண்ணன் தம்பி

அ) வேற்றுமைத்தொகைகள்

ஆ) வினைத்தொகைகள்

இ) உம்மைத்தொகைகள்

ஈ) அன்மொழித்தொகைகள்

40. சிவப்புச் சட்டை பேசினார், கார்குழலி வந்தாள், பொற்தொடி வந்தாள்,கயல்விழி வந்தாள்

அ) அன்மொழித்தொகைகள்

ஆ) வேற்றுமைத்தொகைகள் இ)வினைத்தொகைகள் ஈ) உம்மைத்தொகைகள்

41.பொங்குபானை

அ) வேற்றுமைத்தொகை ஆ) வினை தொகை

இ) பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

42. கயல்விழி

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) உருவகம் ஈ) அன்மொழித்தொகை

**IV நிரப்புக**

43. சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது______.

அ) சொல் ஆ) இலக்கணம் இ) சொற்றொடர் ஈ) எழுத்து

44. பெயர்ச் சொல்லோடு வினையோ பெயரோ சேரும் தொடரில் இடையில் சொல்லோ உருபோ தொக்கி வருவது_____.

அ) தொகைநிலைத் தொடர் ஆ) தொகாநிலைத் தொடர்

இ) வேற்றுமைத் தொடர் ஈ) வினைமுற்றுத் தொடர்

45. தொகைநிலைத் தொடர் ______ வகைப்படும்

அ) 3 ஆ) 5 இ) 6 ஈ) 9

46. ஒரு தொடரில் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருள் தருவது _____

அ) வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் ஆ) வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்

இ) சொற்றொடர் ஈ) வேற்றுமை உருபுத்தொகை

47. ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து மறைந்து வருவது _____ எனப்படும்

அ) வேற்றுமைத்தொடர் ஆ) உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

இ) வினைத் தொகை ஈ) அன்மொழித்தொகை

48. காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க வினை பகுதியோடு பெயர் வந்து ஒரு சொல்லைப் போல் நடப்பது_____. / காலம் கரந்த பெயரெச்சம்______./ முக்காலத்திற்கும் பொருந்தும் படி விரிந்து பொருள் தருவது_____./ வினைப்பகுதியும் அடுத்து பெயர் சொல்லும் அமைந்த சொற்றொடர்களிலேயே அமைவது_____.

அ) வேற்றுமைத்தொகை ஆ) வினைத்தொகை

இ) பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

49. நிறம், வடிவம், சுவை,அளவு முதலானவற்றை உணர்த்துவது_____.

அ) உவமை ஆ) பண்புப்பெயர் இ) தொழிற்பெயர் ஈ) பொருட்பெயர்

50. பண்பு பெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச் சொல்லுக்கும் இடையில்'மை' எனும் பண்பு விகுதியும் ஆகிய, ஆன எனும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது _______எனப்படும்

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

51.சிறப்புப் பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் 'ஆகிய' என்னும் பண்பு உருபு தொக்கி வருவது_____.

அ) பண்புத்தொகை ஆ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

52. ஆன ஆகிய என்பன ____.

அ) பண்புஉருபு ஆ) வினை உருபு இ) வேற்றுமை உருபு ஈ) உவமை உருபு

53. உவமைக்கும் பொருளுக்கும்( உவமேயம்) இடையில் உவம உருபு மறைந்து வருவது _______எனப்படும்.

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) உருவகம் ஈ) உம்மைத்தொகை

54. இரு சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவது______ ஆகும்.

அ) உவமைத்தொகை ஆ) உம்மைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) வேற்றுமைத்தொகை

55. எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவு பெயர்களைத் தொடர்ந்து வருவது______.

அ) பண்புத்தொகை ஆ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

56. வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்கள் அவை அல்லாத வேறு சொற்கள் மறைந்து வருவது______.

அ) தொகைநிலைத் தொடர்கள் ஆ) தொகாநிலைத் தொடர்கள்

இ) சொற்றொடர்கள் ஈ) அன்மொழித்தொகை

57. கம்பர் பாடல் என்பது ______.

அ) ஆறாம் வேற்றுமைத்தொகை ஆ) இரண்டாம் வேற்றுமைத்தொகை

இ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஈ) அன்மொழித் தொகை

58.’ஆடுகொடி’ என்பது______.

அ) வேற்றுமைத்தொகை ஆ) வினைத்தொகை

இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை

59. ‘சதுரப்பலகை’ என்பது_____.

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

60. செம்மையாகிய காந்தள்- இதிலுள்ள உவம உருபு எது?

அ) செம்மை ஆ) ஆகிய இ) காந்தள் ஈ) செங்காந்தள்

61.'கரும்பலகை' என்பது______.

அ) வினைத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை

இ) பண்புத் தொகை ஈ) அன்மொழித் தொகை

62. 'சென்னை வந்தேன்' என்பது______

அ) நான்காம் வேற்றுமைத் தொகை ஆ) அன்மொழித் தொகை

இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

63. 'மலர்ப்பாதம்' இதில் மறைந்துள்ள உருபு

அ) மலர் ஆ) போன்ற இ) பாதம் ஈ) மலர் போன்ற பாதம்

64.'காரக்குழம்பு' என்பது _____.

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) அன்மொழித் தொகை ஈ) உவமைத்தொகை